Daily Thanthi
தினத் தந்தி
22/03/2014
Page # 19

விலை உயர்வை சமாளிப்பதற்காக

# அட்டை பெட்டிகளின் விலை 20 சதவீதம் உயர்வு

## உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவிப்பு

சென்னை, மார்ச்.22–

அட்டைப்பெட்டி தயாரிப்பில் அதிக பங்கு வகிக்கும் முக்கிய மூலப்பொருளான கிராப்ட் தாளின் விலை உயர்ந்து கொண்டே போகிறது. மேலும் உழைப்பு கூலி 50 சதவீதமும், சரக்கு போக்குவரத்து, ஒட்டுப்பொருட்கள் ஆகியவற்றின் விலையும் 30 சதவீதம் அதிகரித்துள்ளது. பல்வேறு காரணங்களால் விலை ஏற்றத்தை சமாளிப்பதற்காக அட்டைப்பெட்டிகளின் விலை 20 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளன என்று தென்னிந்திய அட்டைப் பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் பாலவாசுதேவன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற தேர்தல் முடிந்து புதிய அரசு பொறுப்பேற்றவுடன், கிராப்ட் தாளுக்கான இறக்குமதி வரியினை குறைக்க வேண்டுகோள் விடுக்க உள்ளோம். சிறுதொழில்களுக்கான வரிவிலக்கை உயர்த்தவும் அரசிடம் கோரிக்கை வைக்க உள்ளோம் என்று அட்டைப்பெட்டி உற்பத்தியாளர் சங்கங்களின் கூட்டமைப்பின் தேசிய தலைவர் ராம்சந்த் எச்.அரோரா கூறினார்.